# இயல் ஏழு

# ஆய்வு நிறைவுரை

கோட்டார் மறை மாவட்டம் உரோமன் கத்தோலிக்க வழிபாட்டு முறையில் தனிப்பங்கைப் பெற்றுள்ளது. இம்மறைமாவட்டம் கோட்டார், குளச்சல் என்னும் இரு மறைவட்டங்களைக் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. இம்மறைமாவட்டத்தில் புனிதர்களின் பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்கள் உள்ளன. புனித தோமா, புனித சவேரியார், புனித அந்தோணியார் பற்றிய கோயில்கள் மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்றுள்ளன.

கோட்டார் மறைமாவட்டத்தில் புனித தோமாவின் கோயில் ஒன்றும். புனித சவேரியார் கோயில் ஐந்தும், புனித அந்தோணியார் கோயில் இருபத்தொன்றும் ஆய்வில் இடம்பெற்றுள்ளன.

தமிழகம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தரை வழியாகவும், கடல் வழியாகவும் பிற நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. யவனர், கிரேக்கர், யூதர், பாரசீகர், அராபியர் முதலானோர் இந்தியாவுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தனர். தமிழகத்தில் மேலை நாட்டினர் தொடர்பு குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. மேலை நாட்டினரை யவனர் எனக் குறிப்பிட்டனர். அவ்வகையில் தோமா ஒரு யவனர் என அறியப்பட்டுள்ளது. யவனர்கள் வியாபாரம் செய்தபடியால் யவனர் துறை இன்று இனயம் துறையாக மாறியுள்ளது என்று வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர்.

புனித தோமா இந்தியாவில் கி.பி 49-இல் தட்சசீலத்தில் ‘கொண்ட பேரரசு’ என்ற அரண்மனையில் இருந்தார் என்றும் பின்பு பாலஸ்தீனத்திற்குச் சென்று மீண்டும் கி.பி.52-இல் மலபாரில் வந்திறங்கி கிறிஸ்தவத்தைப் பரப்பினார்.

கேரளாவில் ஏழு கோயில்களை நிறுவியுள்ளார். பின்பு கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோட்டில் அரைப்பள்ளி ஆலயத்தைக் கட்டினார். பள்ளி என்பதற்கு கோயில் என்று பொருள்.

தோமா கேரளாவில் மலபார், ‘‘கொடுங்கல்லூர், கோட்டக்காவு, பழயூர், கோக்கமங்கலம், நீராணம், கொல்லம், சாயல் போன்ற இடங்களில் மறையுரை ஆற்றி அநேக மக்களுக்கு திருமுழுக்குக் கொடுத்தார்.

உலகிலேயே கிறிஸ்தவத் திருமறைக்கு அமைக்கப்பட்ட முதல் கோயில் தோமா அப்போஸ்தலரால் அமைக்கப்பட்ட திருவிதாங்கோடு கோயில் என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்

சென்னைக்கு அருகிலுள்ள சின்னமலைப் பகுதியில் தோமா திரளான மக்கள் கூட்டத்தில் போதனை செய்து கொண்டிருந்த போது மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கு இயேசுவிடம் வேண்டுதல் செய்தார். உடனே தண்ணீர் கொட்டியது. இதனால் அநேக மக்கள் இயேசுவின் மீது பற்றுறுதிக் கொண்டார்கள்.

கிறிஸ்துவின் நற்செய்தி தோமா மூலம் பரவியதை காளிகோயில் பூசாரிகள் விரும்பவில்லை. தோமா மீது வீண்பழி சுமத்தப்பட்டு விசாரணைக்காக மகாதேவன் என்ற அரசனின் முன் நிறுத்தப்பட்டார். இயேசுவின் மீது பற்றுறுதி கொண்ட தோமா விடுதலைச் செய்யப்பட்டார். இதனால் பூசாரிகளின் எதிர்ப்பு பயங்கரமாகக் காணப்பட்டது.

காளிகோயில் பூசாரிகளால் தாக்கப்பட்ட தோமா தப்பிச் சென்று சின்னமலையில் தான் செதுக்கி வைத்திருந்த கற்சிலுவையைக் கட்டிப்பிடித்து

இறைவேண்டல் செய்து கொண்டிருக்கும் போது ஈட்டியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். தோமாவின் உடல் மயிலாப்பூரில் சாந்தோம் தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கி.பி 4-ஆம் நூற்றாண்டில் பாரசீகத்தில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக சுமார் 400-க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர் குடும்பங்கள் அன்றைய சேரநாட்டில் குடியேறினர். இவர்கள் அப்போஸ்தலரான புனித பர்த்தலேயுவால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி815-மற்றும் 825 ஆண்டுகளில் மார்சாபுர் மற்றும் மார்.ஃ.பபுரோசத் ஆகியஇரு சிரிய நாட்டு ஆயர்கள் இறைப்பணிக்காகத் திருவிதாங்கோட்டுக்கு வந்தனர். வேணாட்டு மன்னர் ஐயனடி திருவடிகள் மார்சாபூர் அவர்களுக்கு ‘தரிசா பள்ளி சாசனம்’ என்ற பட்டயத்தின் மூலம் நிலங்கள் வழங்கினார்.

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தொமினிக்கன் சபை மற்றும் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த மறைபரப்பாளர்கள் திருவிதாங்கோட்டையும், கொல்லத்தையும் முக்கியப் பணித்தளங்களாகக் கொண்டிருந்தனர்.

கி.பி.13-ஆம் நூற்றாண்டில் போப் அவர்களால் மேற்கத்திய மிஷனெறிகள் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். 1329-ஆம் ஆண்டு ஆகஸ்டு 9-ஆம் நாளிட்ட ஆணைக் கடிதத்தின் படி பாரசீகத்தில் அமைந்த சுல்தானி உயர் மறை மாவட்டத்திலிருந்து புதிய கொல்லம் மறைமாவட்டத்தை அன்றைய திருத்தந்தை 22-ஆம் யோவான் உருவாக்கினார்.

சிரியா நாட்டு அந்தியோக்கிய நகரப் பேராயரின் நேரடிப் பார்வையின் கீழ் சிரியன் கிறிஸ்தவர்களின் சமய வாழ்வு அமைந்திருந்தது.

போர்த்துக்கீசியர் வாயிலாக வந்த கிறிஸ்தவர் தோமா கால கிறிஸ்தவத்தினின்று மிகவும் வேறுபட்டு இருந்தது. போர்த்துக்கீசியர் பிற இந்தியரை கிறிஸ்தவர்களாக்கும் பணியை மறந்தனர்.

கிறிஸ்தவ சமயத்தில் மிகப்பெரிய புரட்சிக்காரராக விளங்கியவர் ஜெர்மனியைச் சேர்ந்த மார்ட்டின் லுத்தர் என்பவராவர்.

தேவேந்திரனின் வெள்ளையானை தன்னுடைய கொம்பைக் கொண்டு மலையைக் கிழித்து ஓர் ஆற்றை உண்டாக்கியது. கோட்டினாலே ஆற்றை உண்டாக்கியதால் கோட்டார் என்னும் பெயர் உண்டாயிற்றென்பர்.

இந்தியாவின் அப்போஸ்தலரான புனித சவேரியார் கோட்டாரில் இறைவழிபாடு செய்தவர். கோட்டார் புனித சவேரியார் கோயில் கத்தோலிக்கர்களுக்கு புனித இடமாக வளங்கி வருகிறது.

கி.பி15-ஆம் நூற்றாண்டில் தூய சவேரியாரின் மறைபரப்புப் பணியுடன் பல இயேசு சபைக் குருக்களின் தீவிர முயற்சியாலும் கிறிஸ்தவம் வளரத் தொடங்கியது.

கி.பி.18-ஆம் நூற்றாண்டில் குமரி மாவட்டத்தின் உள்நாட்டுப் பகுதிகளில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவியது. மேல் ஜாதியினரின் அடக்கு முறைகளினாலும், பாரம்பரிய கிறிஸ்தவ மதத்தின் மீது ஏற்பட்ட வெறுப்பினாலும், மூடபழக்க வழக்கங்களினாலும், மன்னராட்சியின் மீது

இருந்த கடும் வெறுப்பினாலும் பரவலான நாடார் மக்கள் விடுதலை உணர்வுடன் கத்தோலிக்க மறையைத் தழுவினர்.

கத்தோலிக்கம் கண்ட வளர்ச்சியில் 26-05-1990 கோட்டார் தனி மறைமாவட்டமானது முதல் ஆயராக மேதகு லாரன்ஸ் பெரைரா நியமிக்கப்பட்டார்.

ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட இம்மறை மாவட்டத்தில் மக்கள் தொகை இடவசதிக் காரணமாகவும், மறைபரப்பு இன்னும் விரிய வேண்டும் என்ற தாக்கத்தாலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆணைப்படி 22-12-2014 அன்று கோட்டார் மறைமாவட்டம் இரண்டாகப் பிரிந்தது. தற்போது கோட்டார் புதிய மறைமாவட்டம் 81 பங்களுடன் 100-க்கு மேற்பட்ட ஆலயங்களைக் கொண்டு சிறப்புடன் இறைப்பணி செய்து வருகின்றது.

புனிதர்கள் என்பவர் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகச் சொல்லாலும், செயலாலும் வாழ்ந்து மடிந்தவர்கள் ஆவர்.

புனித தோமையார் கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் இந்தியாவில் சமயப் பணியும், சமூகப்பணியும் செய்தவர் ஆவர். தோமாவின் மறையுரையைக் கேட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் சுமார் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆவார்.

ஸ்பெயின் நாட்டில் பிறந்த சவேரியார் ஆரம்பக்கல்வியை சவேரியார் கோட்டையில் கற்றுக் கொண்டார். பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்த சவேரியார் சில காலம் பேராசிரியராகப்

பணியாற்றினார். பின்னர் துறவு வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இந்தியாவுக்கு நற்செய்தியைப் பரப்ப வந்த புனித சவேரியார் குமரிமாவட்த்திலும் நற்செய்திப்பணி செய்து அநேக மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றினார்.

புனித அந்தோணியார் போர்ச்சுக்கல் நாட்டில் பிறந்தவர். புனிதர்களுக்குள்ளே கோடி அற்புதர் என்று சிறப்பிக்கப்படுகிறார். இவர் இளம் வயதிலேயே சிலுவை அடையாளத்தின் மகிமையை நன்கு உயர்ந்தவர். தன் இளம் வயதிலேயே குருபட்டம் பெற்று கப்புச்சின் சபையில் துறவியாகச் சேர்ந்தவர்.

இவர் மறையியல் அறிவையும், மெய்யியல் அறிவையும் கொணடவர். பிரிவினை சபைக்கு பெரும் சவாலாக இருந்தவர்.

கி.பி.1123 ஆம் ஆண்டு ஜூன் பதினொன்றாம் நாள் மரணமடைந்தார். புனித அந்தோணியாரின் மறைவுக்குப் பின் பல கோயில்கள் தோற்றம் பெற்றன.

ஆதி மனிதன் இயற்கையோடியைந்து வாழ்வு நடத்தியதால் இயற்கையை வழிபட்டு வந்தான். இயற்கை தோற்றங்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் போன்றவற்றைக் கண்ட வாய்ப்பு அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகள் சமயம் தோன்றக் காரணமாயின என்று மாக்ஸ் முல்லர் குறிப்பிடுகின்றார்.

திருவழிபாடு என்பது ஆங்கிலத்தில் ‘லிட்டர்ஜி’ என்று அழைக்கப்படுகிறது. கத்தோலிக்க மறையில் உலகில் 22 வழிபாட்டு முறைகள் உள்ளன.

குமரி மாவட்டத்தில் மூன்று விதமான கத்தோலிக்கப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஒன்று உரோமன் கத்தோலிக்கம்என்ற கோட்டார் மறைமாவட்டம் ஆகும்.

திருவழிபாட்டின் உட்கூறுகளாக திருப்பலி உள்ளன. திருப்பலி மூன்று விதமாக நடைபெறுகிறது.

உரோமன் கத்தோலிக்க வழிபாட்டு முறை இலத்தீன் மற்றும் தமிழ் மொழியிலும் நிகழ்த்தப்படுகின்றது.

வழிபாடு மக்களின் வாழிவியலோடு பின்னிப் பிணைந்தவைகளாக உள்ளன. பிற கத்தோலிக்க வழிபாட்டு முறையிலிருந்து உரோமன் கத்தோலிக்க வழிபாட்டு முறை சிறிது மாற்றம் பெற்றுள்ளது.

கோயில்கள் என்பவை மனிதத் தேவைகளில் ஒன்றாக அமைக்கப் பட்டுளளன. சமூக அமைப்பினை அறநெறியுடன் செய்லபடுத்த கோயில்கள் தேவைப்படுகின்றன.

கோட்டார் மறைமாவட்டத்தின் கீழ் புனித தோமா, புனித சவேரியார், புனித அந்தோணியார் போன்ற கோயில்கள் அடங்கியுள்ளன. இக்கோயில்கள் தோற்றம் பற்றி பல கதைகளும் வாய்மொழிச் செய்திகளும் மக்கள் மத்தியில் நிரம்பிக் காணப்படுகின்றன.

கோயில்களில் முக்கிய நிகழ்ச்சிகளாக பங்குபேரவை, அன்பியங்கள், பாலர்சபை, சிறுவழி இயக்கம், கோல்பிங் இயக்கம் போன்றவை செயல்பட்டு வருகின்றன.

கோயில்களில் ஒவ்வொரு வருடமும் திருவிழா சிறப்புடன் நடைபெறுகின்றன. இவை மக்களின் குடும்ப விழாவாகக் கொண்டாடப்படுகின்றன.

கோயில்களின் பிற விழாக்களான கிறிஸ்மஸ், புத்தாண்டு மற்றும் உயிர்ப்பு விழா போன்றவை நடைபெறுவதை மக்கள் கண்டுணர்கின்றனர்.

கோட்டார் மறை மாவட்டத்தில் புனித தோமாவின் கோயில் சின்ன முட்டத்தில் உள்ளன. இக்கோயிலானது தோமாவின் கரத்தால் குருசை வைத்து வழிபட்டு உருவாக்கம் பெற்றதாக பல வாய்மொழிச் செய்திகளும், கதைகளும், வரலாற்றுப்பூர்வமான ஆதாரங்களும் தெரிவிக்கின்றன.

புனித தோமாவின் கையால் உருவாக்கப்பட்டுள்ள கிணற்றை மக்கள் ‘தொம்மைக் கிணறு’ என்று அழைத்து வருகின்றனர். கோட்டார் புனித சவேரியார் கோயில் செய்திகள் தெளிவாக இடம் பெற்றுள்ளன. கோட்டாரின் வாணபச்சிறப்பும், புனித சவேரியார் கோட்டாரைக் கைப்பற்ற வந்த எதிரிகளான இயேசுவின் சிலுவையைப் பிடித்துக் கொண்டு விரட்டின செய்தியும், அதனால் விட்டலன் படைகள் பின்னிட்டு ஓடின செய்தியும் இடம்பெற்றுள்ளன. இதனையறிந்து திருவிதாங்கூர் மன்னன் கோட்டாரில் கோயில் கட்ட அனுமதியளித்தச் செய்தியும் ஆய்வில் விளக்கப்பட்டுள்ளன.

மாத்தால் புனித சவேரியார் கோயில் உருவாக்கச் செய்திகளும், தொழில் செய்ய வந்த மக்கள் குருசு வைத்து வழிபட்டச் செய்தியும் ஆராயப்பட்டுள்ளன.

ஹெலன்நகர் புனித சவேரியார் கோயில் கன்னியர்களின் மறைக்கல்வி வகுப்பின் மூலம் உருவாக்கப் பெற்றதாகும். தற்போது இக்கோயில் மக்கள் பக்கத்து ஊர்களில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வருவதை அறியமுடிகின்றது.

காரியாங்கோணம் புனித சவேரியார் கோயில் முக்கடல் போகும் வழியில் உள்ளது. இவ்வூரில் கூலிவேலை செய்ய வந்த பிரான்சிஸ் என்பவரால் இக்கோயில் உருவாக்கப்பட்டதாகும். இவ்வூரில் ஒருவருக்கு இருபது ஆடுகள் ஒரு மாதமாக காணாமல் போனது. இக்கோயிலில் பொருத்தனையோடு வழிபட்ட அன்றே இருபது ஆடுகளும் அதே இடத்தில் கூட்டமாக வந்தது. இது புனித சவேரியாரின் புதுமையால் கிடைத்துள்ள செய்தியாகும். தற்போது இக்கோயில் மலை சவேரியார் கோயில் என்று அழைக்கின்றனர்

ஆலஞ்சி முட்காடுகளும், முட்புதர்களும் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டது. இவ்வூர் மக்கள் அதிகமாகப் பேய்களை வணங்கி வந்தனர். கி.பி.1541-ஆம் ஆண்டு புனித சவேரியார் கோவா வந்து குமரி மாவட்டத்திலும் மறையுரையை அறிவித்தார். ஆலஞ்சியில் பல மக்களைச் சந்தித்து மறையுரையைப் போதித்தார். சவேரியார் கல்குருசை வைத்து வழிபட்டார். பின்னர் தம்பணியை போத்தி என்பவரிடம் ஒப்படைத்தார். போத்தி என்பதற்கு பெரியவர் என்று பொருள்.

கி.பி.1840-ஆம் ஆண்டு கார்மல் சபையைச் சார்ந்த அருட்தந்தை எலியாஸ் என்பவர் இவ்வூர் மக்களைச் சந்தித்தார். வறுமையால் மக்கள் இருப்பதைக் கண்டு 140 ஏக்கருக்கு அதிகமான நிலத்தை ஆலஞ்சிக்காக வாங்கினார். இதனால் தறவாடு குடும்பத்துக்கும் இவ்வூர் கோயில் சொத்துக்கும் வழக்கு நடந்த செய்தி ஆய்வில் இடம் பெற்றுள்ளன.

1840-ஆம் ஆண்டு விடுதலை பெற்று போர்த்துக்கீசிய கட்டடக் கலைஞர்களின் ஒத்துழைப்பால் கோயில் கட்டப்பட்டது.

புனித அந்தோணியார் பற்றி இருபத்தியொரு கோயில்கள் உள்ளன.

ஆசாரிப்பள்ளம் புனித அந்தோணியார் கோயிலின் உருவாக்கச் செய்திகளும், மக்கள் பெற்றுவரும் புதுமைகளும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

நைனார்பொத்தை புனித அந்தோணியார் கோயில் உருவாக்கத்திற்கு கிளிரீசன் அருட் சகோதரிகளின் பணிபோற்றுதற்குரியது.

அஞ்சுகூட்டுவிளை புனித அந்தோணியார் கோயில் பற்றிய செய்திகளும், கோயில் உருவாகக் காரணமான பனைத் தொழிலாளியின் குடும்பப் பின்னணியும் ஆய்வில் சுட்டப்பட்டுள்ளன.

இளங்கடை புனித அந்தோணியார் கோயில் மீனவர்களால் உருவாக்கப்பட்டு பரதர் இனமக்கள் சீட்டு போட்டு புனித அந்தோணியாரை பாதுகாவலராக வைத்து வழிபட்டனர்.

தளவாய்புரம் புனித அந்தோணியார் கோயில் வளர்ச்சிக்கு கோட்டார் ஆயர் ஆரோக்கியசாமியின் ஒத்துழைப்பும், ஜெர்மனியிலுள்ள ‘Missio’ என்ற குருவானவரின் நன்கொடையும் பெரிதும் பயன்பட்டுள்ளது.

இலங்காமணிபுரம் புனித அந்தோணியார் கோயில் வளர்ச்சிகுன்றி காணப்படுகிறது. இக்கோயிலில் பத்து குடும்பங்களே அங்கத்தினர்களாக உள்ளனர்.

குருசடி புனித அந்தோணியார் கோயில் பற்றிய அற்புதக் கதைகளும், காட்சியும் மந்தைக்காடு குருசடி ஆன செய்தியும் காட்சி பெற்ற மனிதருக்கு ‘இன்னாசிமுத்து’ என்ற பெயரைச் சூட்டி சவேரியார் திருமுழுக்குக் கொடுத்தச் செய்தியும் ஆய்வில் இடம் பெற்றுள்ளன.

திட்டுவிளை புனித அந்தோணியார் கோயிலின் உருவாக்கத்திற்குக் காரணமான மீன்வியாபாரிகள் பற்றியும், சம்பக்கடை என்ற பெயர் மாறி வந்த செய்தியும், தற்போது கோயிலின் வளர்ச்சி நிலைப் பற்றிய செய்திகளும், விளக்கப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றி முஸ்லீம், இந்து, குடியிருப்புகளும் உள்ளன.

பெரியகாடு புனித அந்தோணியார் கோயிலின் வழக்காற்றுச் செய்திகள் கதைப்பட போக்காகக் காணப்படுகின்றன. இச்செய்திகளின் உண்மைக் காட்சிகள் மக்கள் மத்தயில் நிரம்பிக் கிடக்கின்றதையும், பல மக்கள் வந்து இக்கோயிலில் வந்து அற்புதங்களைப் பெற்று வருவதும் சிறப்புக்குரியது.

பொழிக்கரை புனித அந்தோணியார் கோயில் பொழிக்கரை ஊரில் வாழ்ந்த கேசவன் குடும்பத்தைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன.

அமராவதிவளை புனித அந்தோணியார் கோயில் ஆரம்ப காலத்தில் பனை ஓலையால் காணப்பட்டது. கோயிலில் பல இனமக்கள் அங்கத்தினர்களாக ஒற்றுமையோடு உள்ளனர்.

மருங்கூர் புனித அந்தோணியார் கோயிலின் மணிக்கூண்டு எஸ்.ஏ.ராஜா அவர்களால் திறக்கப்பட்டது.

குலசேகரன்புதூர் புனித அந்தோணியார் கோயில் கட்ட நன்கொடை ஜெர்மனியிலிருந்து ஆயரின் ஒத்துழைப்பால் பெறப்பட்டது. கோயிலில் இந்து, ஆசாரி இனமக்கள் கிறிஸ்தவர்களாக மாறி புனிதரை வழிபட்டு வருகின்றனர். கோயில் மேடை தளவாய்சுந்தரம் (எம.எல்.ஏ) அவர்களால் அன்பளிப்பாகக் கட்டப்பட்டது.

அக்கரை புனித அந்தோணியார் கோயில் முந்நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது.

பரளியாறு புனித அந்தோணியார் கோயில் அரசு பால் வெட்டும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்டதாகும். தற்போது பால் வெட்டும் தொழில் குறைந்து வருவதால் கோயிலும் நலிவடைந்து வருகிறது.

சுருளகோடு புனித அந்தோணியார் கோயிலானது மைக்கேல் நாடார் என்பவரால் புனிதர் படம் வைத்து உருவாக்கப்பட்டதாகும். மக்கள் ‘வனத்து

அந்தோணியார்' என்று அழைத்து வந்தனர். தற்போது கோயில் வளர்ச்சியடைந்துள்ளது.

திருநைனார் குறிச்சி புனித அந்தோணியார் கோயில் உருவாக்கத்திற்குக் காரணமான 'செம்பாயி' என்ற பெண்ணின் சாமி ஆட்டத்தைப் பற்றியும், அதனால் உருவான கதைப்பின்னல்களும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

சின்னவிளை புனித அந்தோணியார் கோயிலின் உருவாக்கமும், நாட்கள் செல்ல, செல்ல மண்கோயில் கடல் தண்ணீரால் இடிந்து போன செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

இனயம் புத்தன்துறை புனித அந்தோணியார் கோயிலின் உருவாக்கச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இக்கோயில் முதலில் மீனவர்கள் மரத்தாலான குருசை வைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் இட நெருக்கடிக் காரணமாக கோயில் கற்சுவரால் பெரிதாகக் கட்டப்பட்டது. கோயிலின் கம்பீரத் தோற்றம் குறித்தும் கண்டறியப்பட்டுள்ளன.

இரும்பிலி புனித அந்தோணியார் கோயிலானது நெசவுத் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்டதாகும். இக்கோயிலின் அங்கத்தினர் அனைவரும் முதலியார் இன மக்கள் என்பது சிறப்புக்குரியதாகக் கருதப்படுகிறது.

அந்தோணியார்புரம் கோயில் பற்றி செய்திகள் கண்டு கொள்ளப்பட்டன. இக்கோயில் முன்னேற்றத்திற்கு தடையாய் இருக்கின்ற மதப்பிரச்சனைகளும் ஆய்வில் அறியப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகளாகும்.

புனித தோமா, புனித சவேரியார், புனித அந்தோணியார் போன்றோரின் வாழ்வு சமயப்பணியும் சமூகப்பணியும் நிறைந்ததாகக் காணப்பட்டது. இத்தகைய புனிதர்களின் வாழ்வும் பணியும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வுலகில் தன்னையே பிறருக்காக அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள் தான் புனிதர்கள். தான் மட்டும் நன்றாக இருந்தால் போதாது பிறரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் உன்னைப்போல பிறரை நேசி என்ற இயேசுகிறிஸ்துவின் கொள்கையோடும் செயல்பட்ட புனிதர்களின் அருட்பணிச் செயல்கள் என்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். புனிதர்களின் உண்மையான வாழ்வு இச்சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும். இத்தகைய புனிதர்களின் புனிதமான செயல்களைப் பின்பற்றி உலகில் வாழவேண்டும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.